வளன் ஆய்வம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# பிரபஞ்சன் சிறுகதைகளில் பாலினச்சமத்துவமின்மை

**மா.யுவஸ்ரீ**

முனைவர்பட்ட ஆய்வாளர்( (முழுநேரம்), தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2

( திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

**ஆய்வுச் சுருக்கம்:**

படைப்பின் உருவாக்கத்தில் ஆணும் பெண்ணும் சமம் என்று கருதினாலும்,வாழ்வியலில் ஆண் பெண் பாகுபாடுகள் காணப்படுகின்றன. இந்தப்பாகுபாடுகளைப் படைப்பிலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அதன் மூலம் பெண்களின் நிலையைச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டி அவர்களை உய்விக்கும் வகையில் படைப்பிலக்கியத் துறையில் பல படைப்பாளர்கள் முனைப்புடன் ஈடுபட்டு வந்துள்ளனர். அவ்வகையில் பிரபஞ்சன் அவர்கள் எழுதிய சிறுகதைத்தொகுப்பில்இடம்பெற்றுள்ள காலம் இனி வரும், சின்னி,வாசனை, அந்த மூன்று நாட்கள், சிறுமை கண்டு ஆகிய கதைகளில் பெண்களுக்கான பாலினப்பாகுபாடுகளை ஆராய்வதேஇவ்வாய்வின் சுருக்கமாகும்.

**முன்னுரை:**

மானுடத்தின் சரி பாதியாக விளங்கும் பெண்களுக்குச் சமமதிப்பு, சுயமரியாதை, சுய முயற்சி என்பவை கானல் நீராகவே போய் விடுகிறது. சமுதாயத்தில் சமயம், பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், அரசியல் போன்றவற்றில் பெண்களின் மதிப்பீடு சமத்துவம் இல்லாத நிலை காணப்படுகிறது. சமுதாயத்தில் ஒரு பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவளுடைய நடை, உடை,பாவனைகள் அனைத்திலும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு கூண்டுக்கிளியாகக் காணப்படுகிறாள். உலகம் ஆண் பெண் எனும் இருபாலராலும் உருவாக்கப் பெற்றுள்ளது. இரண்டும்

சேர்ந்த ஒன்றுதான் உலகம். இரண்டும் ஒன்றுபட்டு இயங்கினால் தான் இவ்வுலகம் சிறப்படையும். மக்கள் தொகையில் சரிபாதியாகப் பெண்கள் உள்ளனர். தெய்வங்களில் ஆண், பெண் எனக் காட்சியளிக்கின்றனர்.

ஆறு, மலை போன்ற அனைத்திற்கும் பெண் பெயர்களை வைத்துள்ளனர். பெண்ணைப் போற்றும் இச்சமூகத்திலேயே பெண்ணுக்கு எதிரான வன்முறைகள் ஒவ்வொரு நிமிடமும் நடந்து கொண்டே இருக்கின்றன. பெண்ணின் சிக்கல்களைப் படைப்பிலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அதன் மூலம் பெண்களின் நிலையைச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டி அவர்களை ஊக்குவிக்கும் வகையில் படைப்பிலக்கியத் துறையில் பலவகைப் படைப்பாளர்கள் அமைப்புடன் ஈடுபட்டு வந்துள்ளனர். இவ்வுலகில் உள்ள மனிதர்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும்காலக் கண்ணாடியாகவும் அறியாமை இருளை அகற்றும் ஒளிவிளக்காகவும் திகழ்ந்து வாழ்க்கையை வளமாக்கி கொண்டிருப்பது இலக்கியமாகும். அந்த இலக்கியங்கள்கவிதை, உரைநடை, புதினம், சிறுகதை, நாடகம் போன்றன.இவை இலக்கியக் கூறுகள் வாயிலாக இவ்வுலக மக்களின் பண்பாடு, ஒழுங்கு முறைகள், கலை, பட்டறிவு போன்றவற்றைக் காட்டுகின்றன. அகிலத்தில் உறவுகள் மேம்பாடு அடைவதில் குடும்பம் மிகவும் முக்கிய இடம் வகிக்கின்றது. குடும்பத்தில் உள்ள பெண்கள் பல வகையான இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். பெண்கள் வாழ்வில் எவ்வகைச் சூழல்களையும், பழக்க வழக்கங்களையும், ஒடுக்கு முறைகளையும் சந்தித்து வருவதைப் பிரபஞ்சன் சிறுகதைத் தொகுப்பின் வழியாக ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணியம் விளக்கம் :**

ஆங்கிலத்தில் உள்ள ‘Feminism’என்ற சொல் பெண்கள் பற்றிய அறிவுத்துறை சார்ந்த ஒரு சமூக விஞ்ஞானம் ஆகும். ‘Feminism’ என்ற ஆங்கிலச் சொல் ‘Femina’ என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபு ஆகும். பெண் என்னும் சொல் பெண்ணுக்குரிய இயல்புகளை உடையவள் என்று பொருள்படும். இச்சொல் தமிழில் பெண்ணியம் என்று வழங்கப்படுகிறது. பெமினிசம் என்ற சொல்லுக்கு தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண்ணிலை ஏற்பு மகளிர், பெண் நிலைக் கொள்கை என்று பல சொற்கள் வழங்கப்படுகின்றன.தற்காலத்தில் கல்வியாளர்கள்பெண்ணியம்என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர்.

பாலினப் பாகுபாடு தொடர்பான சமூகப் பண்பாடு வேர்களை இனம் கண்டுகொள்ளவும், குறிப்பாகப் பெண்களுக்கு எதிரான அடக்குமுறை சுரண்டல் முறைகளை உணர்ந்து கொள்ளவும், பெண்ணியம் தெளிவான வரையறையை முன் வைக்கிறது. இது பெண்களுக்கு எதிரான குடும்ப சமூக நிறுவனங்களில் அரசியலாகி வரும் ஆண் அதிகாரத்தை ஆளுகையை எதிர்த்துச் செயல்படும் உணர்வு நிலையைச் சுட்டி நிற்கிறது.

பெண்ணியத்திற்கு உலகில் உள்ள அனைத்துச் சமுதாயங்களுக்கும் பொருந்தும் படியான முக்காலத்திற்கும் உரிய ஒரு விளக்கத்தைக் கொடுக்க இயலாது. இதன் விளக்கம் ஒரு சமுதாயத்தின் வரலாறு, பண்பாடு இவற்றைப் பற்றிய உணர்வு நோக்கு செயல் இவைகளைப் பொறுத்து மாறுபடும் என்பர். பெண்ணியத்தின் தொடக்க காலமாகிய 17ஆம் நூற்றாண்டில் கூறப்பட்ட கருத்துக்கள் அதன் பின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மாறி அமைந்தது. இருபதாம் நூற்றாண்டில் மேலும் மாறுதல்களுக்கு உட்பட்டிருந்தது. இந்தியாவிலும் 18ஆம் நூற்றாண்டில் நிலவிய பெண்ணியமான இந்துப் பத்தினி தர்மம் 19ஆம் நூற்றாண்டில் இல்லாமல் போனது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெண்ணியக் கருத்துக்கள் புரட்சிகரமான மாறுதல்களுக்கு உள்ளாயிருந்தது.

பெண்ணியத்தை வளர்த்தெடுத்த பெண் விடுதலையை மையமாகக்கொண்ட சிந்தனையாளர்களையும், பெண்ணியவாதிகளையும், அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இயக்கங்களையும், முதலில் அறிந்து கொள்வது தேவையாகிறது. ஐரோப்பாவில் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட தொழில் ரீதியான வளர்ச்சிகளில் பெண்ணியம் பிறந்தது. பெண்ணியம் ஆணுக்கு எதிரானது அன்று. பெண்ணியம் ஆணை எதிர்த்துக் கழகக் குரல் எழுப்புவதன்று. ஆணாதிக்கத்தை எதிர்ப்பதே ஆகும். பெண்ணியம் ஆணாதிக்கத்தை ஒழித்துப் பின் அதிகாரத்தை நிலை நிறுத்துவது அன்று. ஆணின் உரிமையை எதிர்ப்பது. எனவே ஆணாதிக்கத்தை ஒதுக்கிய ஆணும் பெண்ணும் சம உரிமையுடன் இணைந்து வாழ்வதாகிய இல்லற வாழ்வும் சமூக வாழ்வும் பெண்ணியத்தின் கோட்பாடாகும். ஆகவே பெண்ணியம் ஆணுக்கு எதிரானதுஅன்று. அதற்கு மாறாக ஆணுக்குத் துணைபுரிவது. ஆணும் பெண்ணும் சமத்துவத்துடன் இசைந்து இணைந்து வாழ்வதாகும். அவ்வாறான வாழ்வில் எல்லா நலன்களும் பெறுவதாகும்.

**தமிழ் இலக்கண இலக்கியங்களில் பெண்ணியக் கூறுகள்:**

" பெருமையும் உரனும் ஆடுஉ மேன" (தொல். பொருள் – 1044)

என்று ஆணுக்குரிய குண நலன்களையும் ,

"அச்சமும் நாணமும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"(தொல். பொருள் – 1045)

என்று பெண்ணுக்கு உரியவானவாகஅச்சம், நாணம் பேதமை மூன்று குண நலன்களையும் இருக்க வேண்டும் என்று எடுத்துரைக்கிறார்.

"ஒன்றி உயர்ந்த பாலதன் ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"(தொல். பொருள்.– 1039)

ஆடவரும் பெண்டிரும் தங்களது வாழ்க்கைத் துணையினைத் தேர்ந்தெடுக்கும் உரிமைபற்றிக் கூறும்போது சமத்துவத்தோடு சொல்லிவிட்டு அடுத்து ஒரு கட்டுப்பாட்டில் வைத்து ஆணை உயர்த்திக் காட்டுவதாகவே அமைகிறது. தொல்காப்பியர் காலத்திலும் பாலினப் பாகுபாடு இருந்துள்ளது.

**சங்க இலக்கியம்**:

சங்க இலக்கியங்களில் பெண்ணின் உரிமை தடை செய்யப்படவில்லை. பெண் கல்வி, கேள்விகளில்ஓரளவு புலமை பெற்றிருந்தாள்.பெண் பிறவி இழிவுக்குரியது என்று யாரும் கருதவில்லைஎன ஐங்குறுநூற்றுப் பாடலும் (ஐங் : 257)மணக்கொடைக்கொடுமை இல்லைஎன அகநானூற்றுப் பாடலும் (அகம் : 280)எடுத்துரைக்கிறது.

"நல்லிற்பாவையன்ன நல்லோற் கணவன்"

(பதிற்றுப்பத்து-61)

"மறுவில் கற்பின் வாணுதல் கணவன்"

(திருமுருகாற்றுப்படை-அடி-6)

என்று பதிற்றுப்பத்திலும் திருமுருகாற்றுப்படையிலும் பெண்ணுக்குப் பெருமை தேடித்தரும் வகையில் சான்றோர் குறிப்பிட்டுள்ளனர்.சங்க இலக்கியத்தில் ஓரளவுக்கு பெண் மதிக்கப்பட்டும், போற்றப்பட்டும், உரிமைகள் மறுக்கப்படாத நிலையும் சங்க பாடல்கள் எடுத்துரைக்கின்றதை காண முடிகிறது.

**திருக்குறள்:**

திருவள்ளுவர் பெண்களுக்குக் குடும்பம், கற்பு இரண்டும் தேவை என்று வலியுறுத்துவதைக்கீழ்க்காணும் திருக்குறள்கள் வழிஅறிய முடிகின்றது.

“மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத்துணை.” (குறள்- 51)

என்றகுறளில்இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன்கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகிறவளே வாழ்க்கைத்துணை ஆவாள்எனவும்,

‘’ பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின்”(குறள்- 54)

இக்குறளில்இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால் பெண்ணைவிட பெருமையுடையவை வேறு இல்லை எனவும் வள்ளுவர் மொழிகிறார்.

**காப்பியம்:**

காப்பியங்களும் அறவழி வாழ்க்கை நடத்துதல், இல்லத்தைப் பேணிக்காத்தல், கணவனைத் தெய்வமாக வழிபடல் போன்றன பெண்ணின் கடமைகளாக வரையறுத்துள்ளன. இக்காலத்தில் ஆண்கள் குடும்ப வளத்தைக் காக்கக்கூடிய நிலையில் கற்புடன் திகழும் பெண்களைத் தெய்வமாகக் கருதுகின்றனர். ஆனால் மூடப் பழக்க வழக்கங்களைச் சாடுபவர்கள் பெண்களை வெறும் இன்பத்தைத் தரும் போகப் பொருளாகவும், பேய் என்றும் கூறுகின்றனர். பெண் அடிமைத்தனத்தை வலியுறுத்தும் புராண காலத்தில் பெண்ணின் நிலை மேலும் தாழ்நிலை அடைந்துள்ளதைக்காணமுடிகிறது.

பக்தி இலக்கியக்காலத்தில் சமயங்களின் எழுச்சியால் சாதிக் கட்டுகளை மீறிப் பெண்கள் கோவில் வழிபாடு, விருந்தோம்பல், சமூக பணிகளில் கலந்து கொள்ளுதல் போன்றவற்றை மேற்கொண்டனர். அரச,பிராமண, வேளாளர் குலப் பெண்கள் சமய வாழ்வில் அதிகம் பங்கேற்றுள்ளனர். அதற்குப் பின்னர் சிற்றிலக்கியங்களில் பதிவிரதை என்ற கொள்கையை வரையறுத்ததோடு பெண்ணைப் பாலியல் பொருளாகக் கருதியுள்ளனர்.

**நவீன இலக்கியம்:**

மேலை நாடுகளில் தோன்றிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன ஆங்கிலேய கல்வியின் வரவால் இந்தியாவில்அறிமுகம் செய்யப்பட்டன. இவற்றை இலக்கியங்கள் எடுத்துக்காட்ட முனைந்த போது தான் பெண் முன்னேற்றம் முளைத்துவிடத் தொடங்கியது. தமிழில் முதல் முதலில் எழுதப்பட்ட புதினமான வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் மற்றும்மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் மற்றும்பெண் கல்வி, விதவை மறுமணம் முதலியவற்றைப் பேசுகின்றன.

**கணவனின் பொறுப்பின்மை:**

ஒரு குடும்பத்தில் ஏற்படுகின்ற இன்பத் துன்பங்களில் பொதுவாகக் கணவனும் மனைவியும் இணைந்தே பங்கு கொள்ள வேண்டும். ஒரு பெண் திருமணம்ஆனபின்பு பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்குச் செல்லுகையில் அவள் கணவனையே நம்பிச் செல்கிறாள். அப்படியுள்ள கணவன் வரும் தன் மனைவிக்கு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஆசிரியர் 'அந்த மூன்று நாட்கள்' என்னும் சிறுகதைவழி கூறுகிறார். இக்கதையில் சுமதி என்ற பெண்ணுக்கு மாதத்தில் வரும் மாதவிடாய் காரணமாக, சுமதியின் மாமியார் அந்த மூன்று நாட்கள் மட்டும் சுமதியை அவள் தாய் வீட்டிற்கு அனுப்பிவைக்கிறாள்.சுமதி அம்மா வீடு வெகு தொலைவில் உள்ளது. பல மணி நேரம் கடந்து ரயில் பயணம் மேற்கொள்ள வேண்டும். மாதவிடாய் காலத்தில் பெண்கள் சில உடல் உபாதைகளைச் சந்திப்பர். அப்படி இருக்கும் போது சுமதி வெகு தொலைவில் இருக்கும் அம்மா வீட்டிற்குச் செல்வது பெண்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும் அநீதியாகும்.மாதவிடாய்க் காலத்தில் அவள் செல்கையில் அவளது கணவன் செயலற்று உண்பதையும், உறங்குவதையும், வாடிக்கையாக்கியுள்ளான்.

அவன் தன் அம்மாவைத் தட்டிக் கேட்பதும் இல்லை. தன் மனைவியின் மனநிலையைப் பற்றிக் கொஞ்சமும் பொருட்படுத்தாத நிலையைக் காணமுடிகிறது. ஒரு ஆண் தன் மனைவியையோ, சகோதரியையோ தாயையோ உறவாகப் பார்க்கிறானே தவிர ஒரு பெண்ணை மனிதத் தன்மையுடன் பார்க்க மறுக்கிறான். சுமதி கணவனும் அவ்வாறுதான். மூன்று நாட்கள் முடிந்து அவள் வீடு திரும்புகையில் அவன் உண்பதற்கு என்ன திண்பண்டம் கொண்டு வந்துள்ளாள் என்பது மட்டுமே அவனுக்கு எண்ணமாகும். ஆனால் தன் மனைவி அந்த மூன்று நாட்கள் செல்கையில்

அவளது தாய் வீட்டிற்கு அருகில் அக்கம் பக்கத்தினர் பேச்சினால் அவள் படும் துன்பத்தையும் அவன் ஒருபோதும் எண்ணுவதில்லை.

சுமதி பேச வருகையில் தூங்கி விடுவான். அப்போது அந்தப் பெண் யாரிடம் தன் தேவையைக் கூற முடியும். தன் நிலையைப் பற்றி அவனுக்குப் புரிய வைக்க முடிவதில்லைஎன்பதைத் தாண்டி மனம் விட்டு பேசக்கூட முடிவதில்லை. அவளின் கவலை அடுத்த மாதம் அந்த மூன்று நாள் தன் தாய் வீட்டிற்கு செல்வதை நினைத்துத்தான். ஏன் அந்தப் பெண் மாதவிடாய் உடன் அவன் கணவனின் வீட்டிலேயே இருந்தால் என்ன ஆகும்,இதனால் சுமதியின் மாமியாருக்கு என்ன நட்டம் வரப்போகிறது,அவள் ஏன் இந்தத் துன்பத்தை ஏற்க வேண்டும், மாதவிடாய் காலத்தில் தன் தாய் வீட்டிற்கு அனுப்பி வைப்பதை எதிர்த்து மறுத்துப் போகாமல் இருக்கலாம் அல்லவா? ஆனால் ஒரு பெண் தன் கணவனின் துணை இன்றியும் போராடுவது சாதாரணமானது அன்று.

**முதிர்கன்னியின் நிலை:**

ஒரு பெண்ணின் திருமண வயதை அவள் தான் தீர்மானிக்க வேண்டும். அரசின் சட்டத்தின் படி 21 வயதைப் பூர்த்தி செய்தால் பின் எப்போது வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். ஆசிரியரின் 'வாசனை'சிறுகதையில் செம்பக ராஜலட்சுமி என்பவள் அரசுக் கல்லூரியில் துறைத் தலைவராகப் பணியாற்றுகிறார்.ஜனவரி தொட்டால் 36 நிரம்பி விடும். ஆனால் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் தனியே வசித்து வருபவள். வீட்டை மாற்றுவதற்காகத் தன் உடன் பணியாற்றும் தோழி மதன கல்யாணியிடம்தனக்கு வீடு பார்த்துத் தரச் சொல்லி கேட்கிறாள். இருவரும் செல்கின்றனர். வீட்டைத் தர மறுக்கின்றனர். குடும்பம் இல்லை கணவன் இல்லை திருமணம் புரியவில்லை என்ற காரணத்தினால் ஒரு தனிப்பெண் வீட்டில் வசிக்கக் கூடாதநிலையை அவள் சந்திக்கிறாள்.ஒருஆண்திருமணம்புரியாமல்தனிவீட்டில்வாழ்ந்தால்மட்டும்இப்பேச்சுகி டைப்பதில்லை.

சிறுகதையில் வரும் செம்பக ராஜலட்சுமி தன் குடியிருப்பில் அருகில் உள்ளவர்களிடம் சிறு வேலைகள் சொல்லுகையிலும், அவளைப் பார்க்கும் போதெல்லாம் "இவளுக்கு என்ன கேடாம். திருமணம் செய்து கொள்ளாமல் இந்த நிலையில் உள்ளாள். கண்டவன் கிட்ட பேசிக்கிட்டு இருக்கா."(பிரபஞ்சன்தொகுதி-

2ப.22) என்று பிரபஞ்சன் தனது 'வாசனை' சிறுகதை வழியாக இச்சமூகத்தில் பாலின சமத்துவம் இல்லாத நிலையை எடுத்துரைக்கிறார்.

"நான் நடத்துவது குடும்பம் இல்லை என்றால் பின் வேறு என்ன? நான் நடத்துவதற்கு என்ன பெயர்? விபச்சாரமா? விடுதியா? அல்லது சாராயக் கடையா?" (பிரபஞ்சன் தொகுதி-2ப.20) என செம்பா கதாபாத்திரம் வழியாக ஆசிரியர் பெண் தனித்து வாழ முடியாத நிலையைக் கூறுகிறார்

**திருமணம்:**

பெரும்பாலான ஆண்கள் தமது மனைவி தம்மை விட மேலோங்குவதை விரும்புவதில்லை. மனைவியின் ஆளுமையை மழுங்கடிக்க விரும்புகிறான். திருமணத்தில் கூட ஆண்கள் தனக்கு வரும் மனைவி அடக்க ஒடுக்கமானவளாக இருக்க வேண்டும் என்று விரும்புகிற போதும் தனக்கு அடங்கிப் போதலையும் மறைமுகமாக விரும்பி நிற்கிறான்.பணியிலும் ஊதியத்திலும் பெண் தன்னைவிட உயர்வதை பெரும்பாலான ஆண்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு தான் திருமணங்கள் நிகழ்கின்றன. மண வாழ்க்கையில் பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. அத்தகைய பல சிக்கல்களில் பெண்களே பொறுப்பேற்று ஒத்துப்போகும் நிலை ஏற்படுகிறது. இல்லை எனில் பெண் ஆண்களால் கைவிடப்பட்டு விடுவர்என்ற யதார்த்த நிலை நடைமுறையில் உள்ளது.

பெரியோர்களால் ஏற்பாடு செய்யப்படும் திருமணங்களில் மட்டுமல்லாமல் காதல் திருமணங்களிலும் பெண்கள் ஏமாற்றம் அடைகின்றனர். வீட்டில் மூத்த பெண் பிள்ளைகளாகப் பிறப்பவர்கள் தன்னைத் திருமணம் புரிந்து கொடுத்த இடத்தில் எவ்வித இன்னல்களுக்கு உட்பட்டாலும் அங்கேயே வாழ்கின்றனர். ஏனென்றால் தனக்கு பின் பிறந்த சகோதர, சகோதரிகள்திருமணம் தடைபடும் என்பதால் இந்நிலையில் பல பெண்கள் தன் வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர். பெற்றோர் பெண்ணின் விருப்பைக் கேட்காமல் பணம் அதிகம் ஈட்டுகிறான்; நல்ல பணியில் உள்ளான் என்பதாலும் திருமணம் செய்து கொடுக்கின்றனர்.

அதேபோல் ஆசிரியர் காட்டும் 'காலம் இனி வரும்' எனும் சிறுகதையில் சத்யா என்னும் பெண்ணுக்கு பிரபு என்பவரை வீட்டில் சத்யாவின் விருப்பத்தைக் கேட்காமல் திருமணம் செய்து வைக்கின்றனர். சத்யா தன் மனதில் ஆயிரம் எண்ணங்களோடு கணவரிடம் நண்பரைப் போல பழகலாம் என்று திருமணம் முடிந்து அறைக்குள்

செல்கிறாள். ஆனால் அவன் அவளிடம் பேசாமல் மிருகத்தனமாக அவளை வேட்டையாடுகிறான். மறுநாள் காலையில் மனம் உடைந்து சமையலறைக்குச் செல்கிறாள்.அங்கும் அவள் அத்தை முகம் சுளிக்குமாறு திட்டுகிறாள். மேலும்மனம் உடைகிறாள். பின் சில நாள் அவ்வாறே கழிகின்றன.

தக்க சமயம் ஏற்படுகையில் பிரபுவிடம் பேசுகிறாள். தான் திருமணத்திற்காக எடுத்துக்கொண்டவிடுப்பு முடிகின்றது. நான் வேலைக்குச் செல்கிறேன் என்று கூறுகையில் மறுத்து,

"எவனையோ உன் மனசுல வச்சுக்கிட்டுத் தானே என் கிட்ட சரியா நடந்துக்க மாட்டேங்குற."(பிரபஞ்சன்(தொகுதி-1)ப.320)

என்று 'காலம் இனி வரும்' எனும் சிறுகதையில் தனக்கான உரிமையை ஒரு பெண் கோரும் போது அப்பெண் நடத்தையால் விமர்சிக்கப்படுவதை பிரபு கதாபாத்திரம் வழி ஆசிரியர்எடுத்துரைக்கிறார்.

**பெண் குறித்த வசைச் சொற்கள்:**

பொதுவாக ஒருவரின் மீது கோபமோ வெறுப்போ ஏற்பட்டால் வசைச் சொற்களை உபயோகிப்பார். ஆனால் பெண்ணைக் குறித்த சொற்கள் பெண்ணைத் தாக்க எதிராளியை இழிவு படுத்துகிற நோக்கம் என்று வருகிறபோது முதலில் எதிரில் நிறுத்தப்படுவது பெண்தான். எதிர்ச்சொல் சொல்ல முடியாதவளாக அவளை நிறுத்தி வைத்து அந்த மனதைப் புண்படுத்தக் கூடிய வார்த்தைகளை சமூகம் வீசுகிறது. ஆணைத் திட்டுகின்ற போது கூட பெண்ணை அடையாளப்படுத்தும் சொற்கள் அதிக அளவுக்கு உள்ளன. பெண் வசைச் சொற்களில்தாய் தமக்கை தாக்கப்படுகிறாள்.

இத்தகைய சொற்களால் ஆணை அவமானப்படுத்துவது மட்டுமல்ல அவமானப்பட்டு விட்டதாக ஆண் எடுத்துக் கொள்வதும் ஆணாதிக்க வக்கிரத்தின் வெளிப்பாடுகள் தான். ‘காலம் இனி வரும்’ என்னும் சிறுகதையில் சத்யா வேலைக்குச் செல்லுகிறேன் என பிரபுவிடம் கூறியபோது

“நீ எவனையோ நினச்சுட்டு தான் வேலைக்குப் போகணும்னு சொல்லுறியா? தேவுடியா சிறுக்கி”(பிரபஞ்சன்(தொகுதி-1)ப.320) எனும்சொல் வழியாகஆசிரியர் ஒரு பெண் தன் நடத்தையைப் பற்றி விமர்சிக்கும் வசைச் சொற்களைக் கூறினால் தனக்கு அடங்கி விடுவாள் எனும் ஆணின் மனப்பான்மையை எடுத்துக்காட்டுகிறார்.

தேவரடியார் என்ற சொல்லுக்கு இறைவனுக்கு பணி செய்யும் பெண் என்பது பொருள். முதன் முதலில் இச்சொல் கர்நாடகத்தில் உள்ள அலன ஹெல்லியின் கல்வெட்டுகள் கூறுகிறது என்றும், 300 ஆண்டுகளுக்கு உள்ளாகத்தான் இது வழக்கிற்கு வந்திருக்க வேண்டும் என்றும்கூறுவர்.தாசி என்பது தமிழ்ச் சொல் இல்லை. எனவே இவர்கள் தேவரடியார் என்றும்,கணிகை என்றும் குறிப்பிடப்படுகின்றனர். பல்லவர் காலத்தில் இறுதியிலும் சோழர்காலத் தொடக்கத்திலும் பெண்கள் கோவிலுக்குத் தம்மை அடிமைப்படுத்திக் கொள்ளும் மரபு தமிழகத்தில் கால் கொள்ளத் தொடங்கியது. . கடவுள் ஒருவரையேபாதியாகக் கொண்டு தனக்கென்று யாரையும் பாதியாக கொள்ளாமல் பதிலர் என்றும் தாளங்கனித்து ஆடுவதில் சிறந்து விளங்குவதால் கணிகையர் என்றும், இப்பெண்கள் கோயிலைச் சார்ந்த இடங்களில் வாழ்ந்து வந்தமையால் தளிர்ச் சேரி பெண்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

கோவில் தொண்டும் பரத்தையும் தொழிலாகக் கொண்டவர்கள் தேவரடியார்கள் என்று தமிழர் வரலாறு பொருள் விளக்கம் தருகிறது. . பின் காலப்போக்கில் இவர்கள் பாலியல் தொழிலுக்குத் தள்ளப் படுகின்றனர். பேச்சு வழக்கில் தேவரடியார் என்ற சொல், பெண் நடத்தையைப் பற்றி தவறாகச் சித்தரிக்கும் சொல்லாக மாறியது.

ஆசிரியரின் 'சிறுமை கண்டு' எனும் சிறுகதையில் கொண்டப்பா என்பவன் நில அளவை அலுவலகத்தில் பணியாற்றுகிறான்.பணியாற்றும் இடத்திலுள்ளகோபத்தை வீட்டில் உள்ள தன் மனைவி வனதிராட்சையிடம் காண்பிக்கிறான். தனக்கு ஏற்படும் இன்னல்களைப் பற்றி கூறுகிறான். அதற்குஅவள் சிரித்த போது,

“ஏன் சிரிக்கிறாய் பெட்டை நாயே உன்னை கொன்று போடுவேன்” (பிரபஞ்சன்(தொகுதி-2) ப.62) என்கிறான். ஒரு ஆண் தனது இயலாமையைத் தன் மனைவியிடம் எவ்வாறு வெளிப்படுத்துகிறான் என்பதைக் கொண்டப்பா கதாபாத்திரம் வழி கூறுகிறார்.

‘சின்னி’ என்ற சிறுகதையில் சின்னி என்ற ஒருவன் லாரியில் உள்ள கரும்புகளைத் திருட்டுத்தனமாக எடுக்கிறான். லாரிக்குள் இருப்பவன் சின்னியை 'தாயோலி’ என்றும் பின் சின்னி ஒரு பெண்ணை கோபத்தில் ‘சின்னத் தேவுடியா' என்றும் கூறுகிறான். ஒருஆண் ஒரு ஆணைத் திட்டுவதென்றாலும், பெண்ணைத் திட்டுவது என்றாலும் பெண்ணைக் குறித்த வசைச் சொற்களையே கையாளுகிறார்கள்என்பதை இக்கதை வாயிலாக எடுத்துரைக்கிறார்.

**முடிவுரை:**

அறிவியல் வளர்ச்சி பெற்ற இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக சமத்துவம் சுதந்திரம் பெற இயலவில்லை.ஆண் பெண் பாகுபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து பெண்ணை அடிமையாகவே நடத்துகிறான்.பெண்களுக்கு உடல் ரீதியாக வரும் மாதவிடாயைத் தீட்டு என்றும், பெண் வேலைக்குச் செல்வதைத் தடுத்தும், பெண்ணைத் திட்டுகிற போது முகம் சுளிக்கும் அளவுக்கு சொல்லக்கூடாத சொற்களைக் கொண்டு வசைபாடுகிற நிலை பெண்களுக்கு மட்டுமாகவே உள்ளன. இவை போன்ற பாலினப் பாகுபாடு கருத்துக்களைப் பிரபஞ்சன் கதைகள் எடுத்துரைக்கின்றன. எவ்வளவு துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டாலும் பெண்கள் குடும்பம் என்ற கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு ஆண்களையும் இணைத்து அவர்களுக்கு புரிய வைத்து தெளிவு கொள்ள வேண்டும்என்ற கருத்தையும், பணியிடங்களிலும் வீட்டிலும்,வெளியிலும் எவ்வாறு எல்லாம் உடலாலும் மனதாலும் தாக்கப்படுகிறாள்.என்பதை ஆசிரியர் பிரபஞ்சன்சிறுகதைகள் வழியாகக் காண்பிக்கிறார்.

**முதன்மைஆதாரங்கள்:**

பிரபஞ்சன் - பிரபஞ்சன்சிறுகதைதொகுப்பு (1,2,3)
பதிப்பகம் டிஸ்கவரி புக் பேலஸ்
சென்னை-600078

**துணைமைஆதாரங்கள்:**

1.முனைவர்அரங்கமல்லிகா - தமிழ்இலக்கியமும் பெண்ணியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை-600050

2.முனைவர்ம.தனலெட்சுமி-தமிழ் இலக்கியத்தின் தனிநிலைமகளிர், திருச்சி-23

3.முனைவர்இரா. பிரேமா-பெண்ணியம்,உலகதமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,சென்னை

4.தெ.போ. மீனாட்சிசுந்தரனார்-வள்ளுவரும் மகளிரும்,வசந்தா பதிப்பகம்,சென்னை-600088

5.முனைவர்இரா.ரெங்கம்மாள்-பெண்ணியம் அணுகுமுறையும்இலக்கியப் பயன்பாடும் அறிவு பதிப்பகம் ராயப்பேட்டை, சென்னை-600014